# நீங்கள் தேவனை நேசிக்க விரும்பினால், அவருடைய பிள்ளைகள் எல்லாரையும் நேசிக்கத் தொடங்குங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **எலியா**, மார்ச் 1, 1955, பத்தி எண் 11

இப்பொழுது, நேசிக்கப்பட வேண்டுமென்று எல்லாருமே விரும்புகின்றனர். நான் உங்களிடம் உண்மையைத்தான் சொல்லுகிறேன். நான் உண்மை யையே கூறுகிறேன். **தேவன் என்னை நேசிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன், ஜனங் களும் என்னை நேசிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்**. அது முற்றிலும் உண்மை. **தேவன் என்னை நேசிப்பாரானால், அப் போது ஜனங்கள் என்னை நேசிப்பார்கள். நான் அவருடைய ஜனங்களை நேசித்தால், அப்போது அதைச் செய்வதற்காக அவர் என்னை நேசிப்பார். நான் அவரை நேசிப்ப தைக் காட்டிலும், நான் உங்களை நேசிப் பதையே தேவன் அதிகமாக விரும்புவார்.** அது உங்களுக்கு தெரியுமா? அங்கே பின்னா லிருக்கும் என்னுடைய மகனை நீங்கள் நேசிப்ப

தையே நான் அதிகம் விரும்புவேன், **என்னைக் குறித்து நீங்கள் என்ன கூறினாலும் அது ஒரு பொருட்டல்ல. நீங்கள் என்னுடைய பிள்ளைகளை நேசிக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்**. **எந்த தகப்பனும் அதையே நினைப்பார். எனவே பிதாவாகிய தேவனும் அதே காரியத்தையே எண்ணு கிறார்**, அவர், "**மிகவும் சிறியவராகிய என் னுடைய சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்**" என்று கூறியுள் ளார். எனவே **நீங்கள் தேவனை நேசிக்க விரும்பினால், அவருடைய பிள்ளைகள் எல்லாரையும் நேசிக்கத் தொடங்குங் கள்**. **அப்போது தேவன் உங்களுக்கு பலனளிப்பார். நீங்கள் அப்படியே அவரு டைய பிள்ளைகளை நேசிப்பீர்களானால், தேவனுடைய அன்பு உங்களுக்குள் இருக்கிறது என்பதையே அது காட்டுகிறது.**

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*